# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 46/ 2021 நாள்: 11.10.2021

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் 11.10.2021 அன்று நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் வாக்குப்பதிவின் போது பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கையாளுவதற்கான பயிற்சி பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட அனைத்து 38 மாவட்டங்களுக்கான முதன்மைப் பயிற்றுநர்களுக்கு (Training Programme for Master Trainers) "BEL" நிறுவன தொழில்நுட்ப அலுவலர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டது.**

தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலின்போது பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை உரியவாறு இடர்பாடின்றி கையாளுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் உள்ள பணியாளர்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை இயக்குவதில் அனுபவமுள்ள 120 முதன்மைப் பயிற்றுநர்களுக்கான பயிற்சி, (Training Programme for Master Trainers) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தில் 11.10.2021 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை 19 மாவட்டங்களுக்கும், மற்றும் மதியம் 3.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை இதர 19 மாவட்டங்களுக்கும் "BEL" நிறுவன தொழில்நுட்ப அலுவலர்களால் வழங்கப்பட்டது.

பயிற்சி பெற்ற மேற்படி முதன்மைப் பயிற்றுநர்கள் மூலம் அந்தந்த மாவட்டங்களின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தொடர்புடைய தேர்தல் பணியாளர்களுக்கு மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களை இயக்க தக்க பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி. எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி தெற்கு மண்டல துணை ஆணையர் திரு. சிம்ரன்ஜீத்சிங் காலோன், இ.ஆ.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு.தனலட்சுமி, மற்றும் ஆணையத்தின் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

11/10/2021

மக்கள் தொடர்பு அலுவலர்